பூச்சிகளை அழிக்க

கோடை உழவு செய்ய அறிவுறுத்தல்

சிவகங்கை, மே 30: விவசாயிகள் கோடை உழவு செய்து மக்காச்சோளத்தை தாக்கும் பூச்சிகளை அழிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட வேளாண்மைத்துறை சார்பில் தெரிவித்துள்ளதாவது: சிவகங்கை மாவட்டத்தில் கோடை மழையை பயன்படுத்தி கோடை உழவு செய்து மக்காச்சோள பயிரினை தாக்கும் படைப்புழுவினை அழிக்கலாம். இப்புழுத் தாக்கத்தை வரும்முன் தடுக்க வயலை நன்றாக கோடை உழவு செய்துஎக்டருக்கு 250 கிலோ என்ற அளவில் வேப்பம் புண்ணாக்கு இட்டு கூட்டுப்புழுவிலிருந்து அந்துப்பூச்சி வெளிவருவதை தடுக்கலாம்.

மேலும், விதைப்பு செய்யும் போது விவசாயிகள் அனைவரும் ஒரே நேரத்தில் விதைப்பு செய்ய வேண்டும். அடுத்தடுத்து தொடர்ச்சியாக மக்காச்சோளம் பயிரிடுவதை தவிர்க்க வேண்டும். நீர் பாய்ச்சும் நிலத்தில் கம்பு நேப்பியர் புல்வகை அல்லது சோளப்பயிரினை 2முதல் 4வரிசை சுற்றிலும் மக்காச்சோளம் விதைப்பதற்கு 15நாட்கள் முன்பாக விதைக்க வேண்டும்.

குறுகிய காலப்பயிர்களான தட்டைப்பயிறு, சூரியகாந்தி, எள் மற்றும் மரிக்கொழுந்து ஆகியவற்றை மக்காச்சோளத்தைப் சுற்றி விதைக்க வேண்டும். உளுந்து பாசிப்பயிறு மற்றும் தட்டைப்பயிரினை ஊடு பயிராக விதைப்பு செய்யலாம். இனக்கவர்ச்சிப்பொறி எக்டேருக்கு 12என்ற அளவிலும், வைத்து ஆண் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். விளக்குப்பொறி மூலம் இரவு நேரங்களில் தாய் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். படைப்புழு தாக்கத்தை கட்டுப்படுத்தும் மருந்துகள் தெளிக்கலாம்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடு தேடி வரும் ரேஷன் பொருட்கள்

சிவகங்கை, மே 30: வருகிற ஜூன் மாதத்திற்கான ரேஷன் பொருட்களை 2 மற்றும் 3ம் தேதிகளில் பெற்றுக்கொள்ளலாம் என கலெக்டர் தெரிவித்துள்ளார்.

தாயுமானவர் திட்டத்தின் மூலம் சிவகங்கை மாவட்டத்திலுள்ள ரேஷன் கடைகள் வாயிலாக 65 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கு சென்று பொருட்கள் வருகிற 2ம் தேதி மற்றும் 3ம் தேதிகளில் வழங்கப்பட உள்ளது. எனவே இரண்டு தேதிகளில் ஜூன் மாதத்திற்கான ரேஷன் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம் என்று கலெக்டர் தெரிவித்துள்ளார்.

சுற்றுலா விடுதிகளை பதிவு செய்ய அறிவுறுத்தல்

சிவகங்கை, மே 30: மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:சிவகங்கை மாட்டத்தில் தமிழக அரசு சுற்றுலாத்துறை சார்பில் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்திடும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில் உணவுடன் கூடிய தங்கும் விடுதி மற்றும் வீட்டில் தங்கும் விடுதி, சாகச சுற்றுலா நடத்துபவர்கள் போன்ற சுற்றுலா தொழில் முனைவோர் தமிழ்நாடு சுற்றுலாத் துறையில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படி http:tntourismtours.com என்ற இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும். இது தொடர்பான விவரங்களுக்கு காரைக்குடி, மாவட்ட சுற்றுலா அலுவலரை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக பட்டினி தினம்

தொண்டி, மே 30: தொண்டியில் தவெக சார்பில் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு அன்னதானம் வழங்கினர். உலக பட்டினி தினத்தை முன்னிட்டு நேற்று தொண்டியில் தமிழகவெற்றிக்கழகம் சார்பில் ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. தொண்டி பேரூர் செயலாளர் புரூஸ்லி, தெற்கு ஒன்றிய செயலாளர் அமல்ராஜ், பேரூர் நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மான்களை பாதுகாக்க காடுகளில்

தண்ணீர் தொட்டி அமைக்க வேண்டும்

கிராமமக்கள் வலியுறுத்தல்

சிவகங்கை, மே 30: சிவகங்கை அருகே வெள்ளை மலையில் வசிக்கும் மான்களுக்கு மலைப்பகுதிக்குள் குடிநீர் தொட்டி அமைத்து அவைகளை பாதுகாக்க நடவடிக்கைஎடுக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.சிவகங்கை அருகே மலம்பட்டி, மலைஅழச்சிப்பட்டி, திருமண்பட்டி, வலையராதினிப்பட்டி, திருமலை பகுதிகளில் தொடர்ச்சியாகவெள்ளை மலை கானப்படுகிறது. சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பரப்பளவில் புதர்கள், மரங்கள் உள்ளிட்ட காடுகளைக்கொண்ட இம்மலை மதுரை மற்றும் சிவகங்கை மாவட்ட எல்கையில் உள்ளது.

இங்குள்ள காடுகளில் நூற்றுக்கணக்கான புள்ளிமான்கள் வசித்து வருகின்றன. இங்கு பெரிய மரங்களுடன், பல மீட்டர் நீள அகலம் கொண்ட செடிகளுடன் புதர்களும் காணப்படுவதால் விலங்குகள் மறைந்து கொள்வதற்கு வசதியாக உள்ளன. இதனால் இப்பகுதியில் மான்கள் அதிகம் காணப்படுகின்றன.

இந்த வனப்பகுதி முழுவதும் தமிழக வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ளது. இங்கு கானப்படும் மான்களை பாதுகாப்பதற்கு மற்ற வனப்பகுதியில் உள்ளது போன்ற வசதிகள் இல்லை. இங்கு கடந்த சில ஆண்டுகளாக போதிய மழையின்றி வறட்சி நிலவியதாலும், காடுகளில் தண்ணீர் மற்றும் மான்களுக்கு தேவையான உணவு கிடைக்காததால் மான்கள் காடுகளை விட்டு மக்கள் வசிக்கும் பகுதிக்குள் வருகின்றன. கோடை காலங்களில் இவ்வாறு காடுகளை விட்டு வெளியேறி சாலைகளை கடக்கும் போது வாகனங்களில் அடிபடுவது, நாய்கள் கடித்து பாதிப்படைவது உள்ளிட்ட சம்பவங்கள் அதிகமாக நடந்து வருகிறது.

அதிகாலை 5 மணி முதல் மான்கள் காடுகளை விட்டு வெளியேறி கிராமங்களுக்கு வருகின்றன. இதனால் இப்பகுதி கிராம மக்கள் மான்கள் குடிக்கும் வகையில் அதிகாலை நேரத்தில் வீடுகளுக்கு வெளியே உள்ள சிமெண்ட் தொட்டிகள், பெரிய பாத்திரங்களில் நீர் வைக்கின்றனர். நீர் அருந்தி முடிந்த பின்னர் காடுகளுக்குள் அவற்றை விரட்டுகின்றனர். எனவே மான்கள் நீருக்காக காடுகளை விட்டு வெளியேறாத வகையில் தொட்டிகள் அமைத்து நீர் தேக்கி வைக்கவேண்டும்என கிராமத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

அவர்கள் கூறியதாவது, மான்கள் காடுகளை விட்டு வெளியேறுவதால் விபத்துகள் மற்றும் நாய்களினால் கடுமையாக பாதிக்கப்படுகிறது. வெள்ளைமலையில் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள தொட்டிகள் சிதைந்த நிலையில் உள்ளன. எனவே புதிய தொட்டிகள் அமைத்து நீர் தேக்கவும், அவைகளுக்கு உணவு கிடைக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றனர்.

காளையார்கோவிலில்

வைகாசி விசாக தேரோட்டம்

▶ காளையார்கோவிலில் வைகாசி விசாக திருநாளை முன்னிட்டு தேரோட்டம் நடைபெற்றது.

காளையார்கோவில், மே 30: காளையார்கோவில் சௌந்தரநாயகி அம்பாள், சமேத சோமேஸ்வரர் சுவாமி திருக்கோயிலில் கடந்த 21ம் தேதி காலை கணபதி ஹோமம் மற்றும் சிறப்பு அபிஷேகம் தீப ஆராதனையுடன் வேதமந்திரங்கள் முழங்க கொடியேற்றத்துடன் திருவிழா தொடங்கியது.

தினமும் வேத மந்திரங்கள் முழங்க விஷேச அபிஷேகமும், தீபஆராதனையும் சிறப்பாக நடைபெற்றது. 9ம் திருவிழாவான நேற்று காலையில் சௌந்தரநாயகி அம்பாள் சமேத ஸ்ரீ சோமேஸ்வரர் சுவாமிக்கு விஷேச அபிஷேகமும் தீப ஆராதனையும் சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து சோமேஸ்வரர், சௌந்தரநாயகி அம்பாள் இரண்டு தேர்களில் காட்சியளித்து வீதி உலா நடைபெற்றது.

இதில் சௌந்தரநாயகி அம்மன் தேரை பெண்கள் மட்டும் இழுத்து வந்தார்கள். ஏற்பாட்டை காளையார்கோவில் கண்காணிப்பாளர் பாலசரவணன், ஸ்தானிகம் சிவஸ்ரீ.ரெத்தின காளீஸ்வரக் குருக்கள், சிகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் மேலாளர் இளங்கோ செய்திருந்தனர். இன்று மாலை தெப்பத்திருவிழா நடைபெறும்.

சேவுகப்பெருமாள் கோயிலில்

திருக்கல்யாண விழா

▶ சிங்கம்புணரி சேவுகப்பெருமாள் அய்யனார் கோயிலில் திருக்கல்யாணம் நடைபெற்றது.

சிங்கம்புணரி. மே 30: சிங்கம்புணரியில் சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானத்திற்கு பாத்தியப்பட்ட பூரணை புஷ்கலா தேவியார் உடனான சேவுகப்பெருமாள் அய்யனார் கோயில் வைகாசி விசாக திருவிழா கடந்த 24ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. 10 நாட்கள் மண்டகப்படி நிகழ்ச்சியாக நடைபெறும் இத்திருவிழாவின் ஐந்தாம் நாள் திருவிழாவான திருக்கல்யாண விழா நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு நடைபெற்றது.

இதையொட்டி சேவுகப்பெருமாள் பூரணை புஷ்கலா தேவியர் ஊஞ்சல் மண்டபத்திற்கு கொண்டு வரப்பட்டு சிறப்பு பூஜைகள் ஊஞ்சலாடும் நிகழ்ச்சி மற்றும் மாலை மாற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து இரவு 7.50 மணிக்கு சுவாமிக்கும் அம்மனுக்கும் மங்கல நாண் பூட்டப்பட்டு திருக்கல்யாண விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு சுவாமியை வழிபட்டனர்.

பக்தர்களுக்கு மஞ்சள் கயிறு குங்குமம், அன்னதானமும் வழங்கப்பட்டது. இதில் சிங்கம்புணரி மற்றும் சுற்றுப்புற கிராமங்களை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இரவில் ஐந்து தலை நாகம் வாகனத்தில் உற்சவர் நான்கு ரத வீதிகளில் வீதி உலா நிகழ்ச்சி நடைபெற்றது. ஆறாம் நாள் சமணர்களை கழுவேற்றும் களுவன் திருவிழாவும், 8ம் நாள் திருவிழாவா புரவி எடுப்பு விழாவும், திங்கள் கிழமை திருத்தேரோட்ட விழாவும், 10ம் திருவிழாவாக பூப்பல்லக்கு விழா நடைபெறும்.

இரவு நேரங்களில்

பஸ் ஸ்டாண்டிற்குள் வர மறுக்கும் அரசு பஸ்கள்

சிரமத்தில் பயணிகள்

மானாமதுரை, மே 30: மானாமதுரை பஸ் ஸ்டாண்டிற்குள் இரவு நேரங்களில் அரசு பஸ்கள் உள்ளே சென்று பயணிகளை ஏற்றி இறக்கி செல்லாமல் நான்குவழிச்சாலையில் இறக்கிவிட்டு செல்வதால் சாலையை கடந்து செல்ல பயணிகள் சிரமப்படுகின்றனர்.

மதுரை-ராமேஸ்வரம் நான்குவழிச்சாலையில் புதுபஸ் ஸ்டாண்ட் உள்ளது. இங்கிருந்து ராமநாதபுரம், விருதுநகர், மதுரை, சிவகங்கை உள்ளிட்ட நான்கு மார்க்கங்களில் இருந்தும் தினமும் 400க்கும் மேற்பட்ட பஸ்கள் இயக்கப்படுவதால் தினமும் ஆயிரக்கணக்கான பயணிகள் வந்து செல்கின்றனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன் பஸ்ஸ்டாண்டின் இருபுறமும் நுழைவு வாயில் கட்டும் பணிக்காக வடக்குபுறம் பணிகள் நடந்தது. தேர்தலுக்கு பின் பஸ் ஸ்டாண்டின் நுழைவுப் பகுதியில் தெற்கில் கடந்த வாரம் பணிகள்துவங்கின.

பஸ் ஸ்டாண்டிற்குள் போதிய இடம் இருப்பதால் பஸ்கள் வந்து திரும்பி செல்கின்றன. ஆனால் இரவு நேரங்களில் அரசு பஸ்கள் பஸ் ஸ்டாண்டிற்குள் செல்லாமல் நான்கு வழிச்சாலையில் பயணிகளை இறக்கி விட்டு செல்கின்றன. இதனால் வயதான குழந்தைகளுடன் பஸ்சில் இறங்கும் பயணிகள் நான்கு வழிச்சாலையை கடந்து செல்ல முடியாமல் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். அதேபோல பஸ் ஸ்டாண்டில் காத்திருக்கும் பயணிகளை ஏற்றி செல்லாமல் செல்வதால் பயணிகள் மணிக்கணக்கில் காத்திருக்கின்றனர்.

இது குறித்து மானாமதுரையை சேர்ந்த டேவிட் கூறுகையில், "நான்கு வழிச்சாலையில் பயணிகள் இறக்கிவிட்டு செல்வதால் பயணிகள் ரோட்டை கடக்கும் போது விபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும் மழை பெய்தால் அவர்கள் பாதுகாப்பாக நிற்க ரோட்டில் இடமில்லை. மானாமதுரை பஸ் ஸ்டாண்டிற்குள் இரவு நேரங்களில் அரசு பஸ்கள் கண்டிப்பாக உள்ளே சென்று பயணிகளை ஏற்றி இறக்கி செல்ல வேண்டும் என்றும் விதிமுறை கடைப்பிடிக்காத ஓட்டுநர், நடத்துனர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என போக்குவரத்து கழக காரைக்குடி மண்டல பொது மேலாளர் உரிய நடவடிக்கைஎடுக்கவேண்டும்" என்றார்.

விசாக திருவிழாவில் சுவாமிகள் வீதியுலா

திருவாடானை, மே 30: திருவாடானையில் ராமநாதபுரம் சமஸ்தானம் - தேவஸ்தானத்திற்கு பாத்தியப்பட்ட சினேகவல்லியம்மன் சமேத ஆதிரெத்தினேஸ்வரர் கோயில் உள்ளது. இக்கோயில் வைகாசி விசாக திருவிழா கடந்த 21ம் தேதி துவங்கியது. ஒவ்வொரு நாளும் பல்வேறு வாகனங்களில் உற்சவர்களான ஆடானை நாதரும், சினேகவல்லி அம்பாளும் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தனர். நேற்று நடைபெற்ற தேரோட்டத்தின் போது பெரியதேரில் சிறப்பு அலங்காரத்துடன் ஆடானை நாதரும்-பிரியாவிடை அம்பாளும், சிறிய தேரில் சினேகவல்லி அம்மனும் ஒன்றன்பின் ஒன்றாக வீதி உலா வந்தனர்.

இந்த தேரோட்டத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இரு தேரையும் வடம் பிடித்து இழுத்து தேரோடும் நான்கு முக்கிய வீதிகளின் வழியாக வலம் வந்த பின் இரு தேர்களையும் ஒன்றன்பின் ஒன்றாக அதன் நிலைக்கு கொண்டு வந்து சேர்த்தனர்.

ஞாயிறுதோறும்
மகளிர் மலர்
படியுங்கள்

சிட்கோ தொழில்பேட்டையில் புதிய தொழில் நிறுவனம் அமைக்கப்படுமா?

காரைக்குடி, மே 30: காரைக்குடி அருகே உள்ள சிட்கோவில் பெரிய அளவிலான புதிய தொழில் நிறுவனம் அமைக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காரைக்குடியில் 57 ஆண்டுகளுக்கு முன்னர் 180 ஏக்கரில் சிட்கோ தொழில்பேட்டை அமைக்கப்பட்டது. இதில் 32 சிறுகுறு தொழில்களுக்கு அரசு சார்பில் கட்டிடம்கட்டப்பட்டது. தற்போது 12தொழில் நிறுவனங்கள் மட்டுமே செயல்பட்டுவருகிறது. 20நிறுவனங்கள் மூடிவிட்டுசென்றுவிட்டனர்.

மிகவும் நலிவடைந்துள்ள தொழில்பேட்டையில் 100 ஏக்கர் நிலங்களுக்கு மேல் காலியாக உள்ளது. இங்கு தொழில் துவங்குவோர்களுக்கு தொழிற்நிறுவனம் அமைக்க விற்பனை செய்யப்படும் விலை வெளிமார்க்கெட் விலையாக உள்ளதால் பெரும்பாலான தொழில்முனைவோர்கள் வாங்க முடியாத நிலை உள்ளது.

எனவே குறைந்த விலையில் இடத்தை விற்பனை செய்ய வேண்டும். தொழில்துவங்குபவர்களுக்கான அரசு மானியம், மின் இணைப்பில் முன்னுரிமை, வரிச்சலுகை உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் சரிவர கிடைப்பது இல்லை. அதேபோல் தொழில்நிறுவனங்களுக்கு தேவையான தண்ணீர் வசதி இல்லாத நிலையே உள்ளது.

எதிர்பார்ப்பில் பொதுமக்கள்

வோர்களுக்கு தொழிற்நிறுவனம் அமைக்க விற்பனை செய்யப்படும் விலை வெளிமார்க்கெட் விலையாக உள்ளதால் பெரும்பாலான தொழில்முனைவோர்கள் வாங்க முடியாத நிலை உள்ளது.

எனவே குறைந்த விலையில் இடத்தை விற்பனை செய்ய வேண்டும். தொழில்துவங்குபவர்களுக்கான அரசு மானியம், மின் இணைப்பில் முன்னுரிமை, வரிச்சலுகை உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் சரிவர கிடைப்பது இல்லை. அதேபோல் தொழில்நிறுவனங்களுக்கு தேவையான தண்ணீர் வசதி இல்லாத நிலையே உள்ளது.

எனவே இங்கு போர்வெல் அமைத்து தர வேண்டும். தவிர சோலர் பிளான்ட் அமைத்து அதன் மூலம் நிறுவனங்களுக்கு தேவையான மின்சாரம் வழங்க வேண்டும். காரைக்குடி பகுதியில் பெரிய தொழில் நிறுவனங்கள் இல்லாத நிலையில் இப்பகுதியில் சுமார் 1000 பேருக்கு நேரடியாகவும், 5000 பேருக்கு மறைமுகமாகவும் பயன்பெறும் வகையில் புதிய தொழில் நிறுவனங்களை துவங்க அரசு நடவடிக்கைஎடுக்க வேண்டும்என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சமூக ஆர்வலர் வெங்கட் பாண்டி கூறுகையில், பாரம்பரிய நகரான காரைக்குடி பகுதியில் கல்வி நிறுவனங்கள் அதிகமாக உள்ளது. ஆனால் தொழிற்சாலைகள் இல்லை. இதனால் இங்குள்ள இளைஞர்கள் வேலைக்காக அதிக அளவில் சிங்கப்பூர், மலேசியாவுக்கு செல்கின்றனர். தவிர சென்னை, கோவை, திருப்பூர், கரூர், ஈரோடு போன்ற நகரங்களுக்கு செல்கின்றனர். இதனை தடுக்கவும் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க இங்குள்ள சிட்கோவில் புதிய பெரிய அளவிலான தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும். தவிர சிட்கோவில் தொழில் நிறுவனம் துவங்க வருவோருக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்றார்.

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் | பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலகம் அலகு: முதல் தளம், எண்.86/11, ஆலந்தூர் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை-600015

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீடு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கவாதினம் செய்யப்பட்டுள்ளது.

கடனீட்டு சொத்துகள் **அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில்** மின்-ஏலம் மூலமாக **30.06.2026 தேதியன்று** விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https:/www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும்.

விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	வதரிந்த விலங்கங்கள் / நிதிசார் வழக்குகள் வதரிந்தது ஏதேனும் (K)
2	கடன் எண்: HF0126H20100145 ராமன் காக்கைதேவர் (கடன்தாரர்), செல்வி R (உப கடன்தாரர்) கிருஷ்ணன்	கோரிக்கை அறிவிப்பு நாள் 08.08.2025 நிலுவைத் தொகை 08.08.2025 தேதியின்படி ரூ.9,52,883/- (ரூபாய் ஒன்பது லட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து எண்ணூற்று எண்பத்து மூன்று மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 17.35% வட்டி.	கையக	மதுரை மாவட்டம், மதுரை தெற்கு பதிவு மாவட்டம், சோழவந்தான் துணை பதிவு மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், முதலைக்குளம் கிராமம், சர்வே எண்.253/2b, தற்போதைய புதிய சர்வே எண்.253/281 இல் வடக்கு பகுதியில் உள்ள 28 சென்ட்களின் வடக்கில் உள்ள 10 சென்ட்கள் அதாவது 4360 ச.அடிக்குச் சமமான பரப்பளவு உள்ள வீட்டு மனை உள்ள சொத்து. இந்த வீட்டுமனையில் ஆர்சிசி வகை வீட்டுக் கட்டிடம், கதவு எண் உள்ள வடக்கு நிலம் தனிகோடிக்குச் சொந்தமானது. 1/9a, Asst No.472, அதன் நான்கெல்லைகள்: வடக்கு: , கிழக்கு: லோகசெல்வத்துக்குச் சொந்தமான நிலம், மேற்கு: வடக்கு தெற்கு சாலை, தெற்கு: B.Sckவுக்குச் சொந்தமான வீட்டு மனை.	ரூ. 14,93,538.00/- (ரூபாய் பதினான்கு லட்சத்து தொன்னூற்று மூன்றாயிரத்து ஐந்நூற்று முப்பத்தெட்டு மட்டும்)	ரூ. 1,49,353.80/- (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்தொன்பது ஆயிரத்து முந்நூற்று ஐம்பத்து மூன்று மற்றும் பைசா எண்பது மட்டும்)	29-06-2026 Before 5 PM	10,000/-	16-06-2026 (11AM – 4PM)	30-06-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்-ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை கயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்-ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரஸ்டீஸ் A/C, ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, ஜிஎஸ்டிஐ பேங்க் லிமிடெட், பான்ஞ்சில் டெக்னிகல் பார்க், கணபதி செனாக் அருகில், 43/44, விமன் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ **29.06.2026** தேதி அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை கயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை **கிளை அலகு: முதல் தளம், எண்.86/11, ஆலந்தூர் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை–600015மேலும் கைபேசி எண், +91 9597907666,**, மின்னஞ்சல் முகவரி baskaran.soundarrajan@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்–2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தார்/ உப – கடன்தார் / அடமானதார்கள்/ ஜாமீன்தார்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 30 நாள்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்திதாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 30.05.2026, இடம்: தமிழ்நாடு

ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு... தினகரன் 890415677 7 9.30 AM - 6.00 PM